பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

29 ] சென்னை—ஞாயிறு, அக்டோபர் 27, 1946. [ விலை. அணா. 2

## வாரக் கடிதம்

### பைத்திய வெறி ஆட்டம்

இரண்டு வாரங்களாக காந்தியடிகளுடைய இருதயத்தை வாட்டி வந்த துன்பங்கள் இன்னும் நீங்கவில்லை. "என்னுடைய நிலைமை என்ன, நான் செய்ய வேண்டியது யாது என்பதை அறிந்து கொள்ள முயன்று வருகிறேன்" என்று சில தினங்களுக்கு முன் சம்பாஷணைக் கிடையில் தற்செயலாகக் கூறினார். தினந்தோறும் செய்யும் பிரார்த்தனைப் பிரசங்கங்களில் தம்முடைய மன வேதனையைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்.

முதலாவதாக அஸ்ஸாம் மாகாணத்தில் வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட பெருஞ் சேதங்களைக் குறித்து வேதனை அடைந்தார். அங்கே பலர் மரண மடைந்தார்கள். ஆயிரக் கணக்கானவர்களுடைய வீடுகள் அழிந்து போயின. லட்சக் கணக்கான பணம் பெறக் கூடிய சொத்துக்கள் சேதமாய் விட்டன.

வங்காளத்திலுள்ள ஜனங்களில் ஒரு பகுதியாரை பைத்திய வெறி ஆட்டி வருகின்றது என்ற செய்தி அஸ்ஸாமிலிருந்து வந்த செய்தியை விட அதிக வேதனை தருவதாகும். அங்கே மனிதன் மிருகத்தை விடத் தாழ்ந்த நிலைக்கு தாழ்ந்து போய் விட்டான். அங்கே மிகவும் சிறிய சிறு பான்மைக் கட்சியாராக இருக்கும் ஹிந்துக்கள் முசல்மான்களால் தாக்கப்படுகிறார்கள் என்று செய்திகள் வந்து கொண்டிருந்தன. நோவகாளியில் நடைபெறும் சம்பவங்களைக் கேட்டது முதல் காந்தி யடிகள், தம்முடைய கடமை யாது என்பதைக் குறித்து மிகக் கடுமையாக சிந்தித்து வருகிறார். கடவுள் தமக்கு வழி காட்டுவாரென்று நம்புகிறார். தம்முடைய அஹிம்சா போதனை ஜனங்களிடம் வேரூன்ற வில்லை. அவர்கள் அவரிடம் இன்னும் அதிக அன்பையும் பக்தியையும் செலுத்தத்தான் செய்கிறார்கள். அவரும் அவர்களுடைய அன்பைப் போற்றவும் அதற்காக வந்தனம் செலுத்தவும் செய்கிறார். அது சம்பந்தமாக அவர் பிரார்த்தனை சமயத்தில் கூறியதாவது :—

" நான் அவர்களுடைய அன்புக்காக அவர்களுக்கு வந்தனம் செலுத்தக் கூடிய ஒரே வழி யாதெனில், எனக்குக் கடவுள் காட்டியருளியுள்ளதும் நான் என் வாழ் நாள் முழுவதும் அனுஷ்டித்து வருவதுமான உண்மையை அவர்களுக்கும் அவர்கள் மூலமாக உலகத்துக்கும் சமர்ப்பிப்பதேயாகும். அப்படிச் செய்வதால் நான் அவர்களுடைய அன்பையும் நன்மதிப்பையும் இழந்து விட்டாலும் இழந்து விடக் கூடும். ஆயினும் என் கடமை அதுதான். நோவாகாளியிலும் கிழக்கு வங்காளத்திலுள்ள இதர இடங்களிலும் நடைபெற்ற அட்டூழியங்களை எதிர்த்துப் பழிக்குப் பழி வாங்க ஹிந்துக்கள் எழுவது தவறு என்று நான் சொல்ல வேண்டியவனாய் இருக்கிறேன். அஹிம்சையே காங்கிரசின் கொள்கை. அதுதான் நமக்கு இப்பொழுது உள்ள ஆற்றல் முழுவதையும் அளித்திருக்கின்றது. பலமுள்ள பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்ப்பதற்கு அஹிம்சையையும் நம்முடைய சொந்த சகோதரர்களை எதிர்ப்பதற்கு இம்சையையும் உபயோகிப்போம் என்று சொன்னால் அத்தகைய அஹிம்சை கோழையின் அஹிம்சையே ஆகும். அத்தகைய கோழையின் அஹிம்சையை நாம் என்றேனும் கைக்கொள்ளுவோம் என்பதை நான் ஒருநாளும் நம்ப முடியாது. காங்கிரஸ் மகா சபையில் ஹிந்துக்கள் மிகப் பெரிய பெரும்பான்மையோராக இருந்த போதிலும் அது எந்த விதத்திலும் ஹிந்து ஸ்தாபன மாகாது. அது எல்லா சமூகங்களுக்கும் சரி சமமாக சொந்தமானதாகும். இப்பொழுது பண்டித ஜவஹர்லால் நேருவுக்குப் பதிலாக ஆச்சார்ய கிருபளானி காங்கிரஸ் அக்ராசனராகி இருக்கிறார். அவருக்கு அந்த ஸ்தானம் பஞ்சு மெத்தை போல் சௌகரியமாக இருக்காது என்று நான் அவரிடம் சொன்னேன். இப்பொழுது அமைக்கப்பட் டிருக்கும் தேசீய மந்திரி சபையில் பிரதம மந்திரி முள் முடியை தரிக்க வேண்டி இருப்பது போலவே காங்கிரஸ் அக்கிராசனரும் முள் சயனத்திலேயே சாய்ந்திருக்க வேண்டியதாகும்.

காலஞ் சென்ற சர். சையது அகமத் ஹிந்துக்களையும் முசல்மான்களையும் இந்தியாவின் இரண்டு கண்களாக கூறினார். காங்கிரஸ் அக்கிராசனர் இந்த இரண்டு கண்களையும் பாரபட்சமில்லாமல் சரிசமமாகப் பாவிக்க வேண்டியவராவார். அவர் இரண்டு சமூகத்தாருக்கும் சரிசமமாக ஊழியம் செய்யக் கடமைப் பட்டவராவார். அதனால் அவர் கிழக்கு வங்காளத்துக்குச் சென்று கொல்லாமல் இறக்கும் வித்தையை அங்குள்ள ஜனங்களுக்கு கற்றுக் கொடுக்க 'வேண்டு மென்று அவரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். தாமே அவ்விதம் நடந்து ஜனங்களுக்கு நிதர்சனமாகக் காட்டினால் அது அவருடைய பாக்கியமாகும். அவர் அங்கே தம்முடைய மனைவியாருடன் போய்க் கொண்டிருக்கிறார். இவர்கள் அங்கே போவது இரண்டு கட்சிகளில் ஒரு கட்சிக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக வன்று. இந்தியாவைப் பாழ்படுத்தப் போவதாக பயமுறுத்திக் கொண்டிருக்கும் சகோதரர்களிடையே உண்டாயிருக்கும் கொலை பாதகங்களைத் தடுப்பதற்கே யாகும். அக்ராசனர் பதவி அடைந்ததும் அவரும் அவருடைய மனைவியாரும் இந்த வேலைகளில் இறங்கி இருப்பது நல்ல ஆரம்பமாகும். காலஞ் சென்ற சுபாஷ் பாபுவின் சகோதரர் சரத் பாபுவும் அவர்களுடன் செல்லுகிறார் அவரும் சாதி மத பேதங்கள் அறியாதவர். சில வருஷங்களுக்கு முன் சரத் பாபுவின் வீட்டில் தங்கி யிருந்தேன். சுபாஷ் பாபு சரத் பாபுவிடம் கொண்டிருந்த மரியாதையை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

வங்காளத்தின் புகழ் மாசுபட ஆரம்பித்திருக்கிறது. தேசத்திற்காக எத்துணைத் தியாகங்களைச் செய்த வங்காளம்! இப்பொழுது பாடிய தேவாரத்தைத் செய்

தருளிய குருதேவருடைய வீடாகிய வங்காளம் இப்படி மாசுபடலாமா? இப்பொழுது பாடிய தேவாரம் பக்தனுக்கு அன்பும் அஞ்சாமையும் வேண்டுமென்று கடவுளிடம் கேட்கின்றது. இந்தத் தேவாரத்தைப் பாடிக்கொண்டு தான் ஆச்சார்ய கிருபளானியும் சரத் பாபுவும் கிழக்கு வங்காளத்துக்குச் செல்லுகிறார்கள். நீங்களெல்லோரும் அவர்களுக்குப் பரிபூரணமாக வெற்றியருள வேண்டுமென்று கடவுளிடம் பிரார்த்திக்க வேண்டும்."

முஸ்லிம் லீக்குக்கு ஒரு வார்த்தை

"முஸ்லிம் லீக்கும் ஆத்ம சோதனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் அவர்கள். இடைக்கால சர்க்காரில் சேர்ந்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்கள் சகோதரர்கள் போல் ஒத்துழைக்கவே மந்திரி சபையில் சேர்ந்து கொள்ள வந்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் அப்படிச் செய்வார்களானால் எல்லாம் நன்றாக நடைபெறும். முசல்மான்களை கொல்லவும் அவர்களிடம் துவேஷம் பாராட்டவும் கூடாதென்று ஹிந்துக்களிடம் நான் கேட்டுக் கொள்வது போலவே முஸ்லிம் லீகர்கள் பாகிஸ்தானுக்காகச் சண்டை போட விரும்பினாலும் கூட சண்டையை தர்மமான முறையிலும் சகோதரர்களைப் போலவுமே செய்ய வேண்டுமென்று முஸ்லிம் லீக்கர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். சிறுபான்மை வகுப்பாருக்குப் பாகிஸ்தானத்தில் பரிபூர்ணமான பாதுகாப்புக்கள் அளிக்கப்படுமென்றும் எல்லோருக்கும் பாரபட்சமின்றி நீதி வழங்கப்படுமென்றும் காய்தே ஆஜம் ஜின்னா சாகேப் கூறுகிறார். இப்பொழுது எங்கே முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக இருக்கிறார்களோ அங்கே பாகிஸ்தான் ஏற்பட்டது போல்தான். ஆதலால் முசல்மான்கள் ஹிந்துக்களைப் பகைவர்களாகப் பாவியாமல் உடன் பிறந்த சகோதரர்களாகவே கருத வேண்டுமென்று அவர்களிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது கிழக்கு வங்காளத்தில் நடைபெறுவது போல் பாகிஸ்தானத்தில் நடைபெறுமானால் பாகிஸ்தானம் உண்டாக முடியுமென்று தோன்றவில்லை. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் பாதுகாக்க வேண்டுமென்றும் தங்களிடையே உள்ள சிறுபான்மை வகுப்பாருடைய ஒரு ரோமத்துக்குக் கூட தீங்கிழைக்காமல் இருப்பார்களென்றும் நம்புகிறேன். அவர்கள் அந்த விதமாக நடக்கக் கற்றுக் கொண்டாலன்றி அவர்கள் அதிகாரத்தை ஏற்றுக் கொள்வது தீமையே தருமென்று சொல்வேன். வங்காளத்தில் நடந்து கொண்டிருப்பது மனிதர்களுடைய செயல் என்று சொல்லத் தகுந்தவையல்ல. அவர்கள் முதலில் மனிதர்களாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும்."

நேர்மை இல்லை

"முஸ்லிம் லீகர்கள் இடைக்கால சர்க்காரில் சேர்வது தேசத்திற்கு நன்மையான காரியமாய் இருக்குமென்று நம்பினேன். ஆனால் இப்பொழுது முஸ்லிம் லீக் கொடுத்திருக்கும் ஜாபிதாவில் ஒரு ஹரிஜனுடைய பெயரும் சேர்க்கப்பட்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன். ஹரிஜனுக்கு மற்றும் ஒரு ஸ்தானம் கிடைத்திருப்பதைக் கண்டு என்னைப் போன்றவர்கள் சந்தோஷப்பட வேண்டுமென்று எண்ணக் கூடும். ஆனால் நான் சந்தோஷப்படுவதாகக் கூறினால் அது என்னையும் காய்தே ஆஜம் ஜின்னா சாகிப்பையும் ஏமாற்றியதாகவே இருக்கும். முஸ்லிம்களும் ஹிந்துக்களும் வேறு வேறு தேச சமூகங்களென்று ஜின்னா சாகேப் கூறுகின்றார். முஸ்லிம் லீக் முற்றிலும் வகுப்பு ஸ்தாபனமேயாகும். அப்படியிருக்க அவர்கள் ஹரிஜன் ஒருவரை எப்படித் தங்களுடைய பிரதிநிதியாக நியமிக்க முடியும். முஸ்லிம் லீகர்கள் மந்திரி சபையில் சேர்ந்து கொள்ளும் முறை நேர்மையானதாகத் தோன்றவில்லை. முஸ்லிம் லீகர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஐந்து ஸ்தானங்களில் ஒன்றை ஹரிஜனுக்கு கொடுப்பதில் எவ்விதமான தாராளமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை, அதிலும் இப்பொழுது கிழக்கு வங்காளத்தில் நடந்து கொண்டிருப்பதை வாசிக்கும்பொழுது அப்படித் தாராளமான எண்ணமிருப்பதாகச் சொல்ல முடியாது. அதனால் சண்டை போடுவதற்காகவே மந்திரி சபைக்குள் வந்திருக்கிறார்களோ என்று எண்ணும்படியாய் இருக்கிறது. ஆயினும் அவர்கள் சண்டை போடாமல் சகோதரர்கள் போல் ஒத்துழைப்பார்களென்றும் இந்தியா முழுவதற்குமாக சேவை செய்வார்களென்றும் நம்புகிறேன். உண்மையான பாரத புத்திரராகவும் ஊழியராகவும் நடந்து கொள்வாரென்றும் நம்புகிறேன்."

பெண்களின் சோதனை

காந்தியடிகள் மற்றொரு சமயம் கூறியதாவது:—

"பெண்கள் மரணமடைவது முக்கியமான விஷயமன்று. அவர்கள் எப்படி மரணத்தை ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதே முக்கியமான விஷயமாகும். தைரியமாக உயிர் துறக்கத் தயாராக இருந்தால் சகோதரன் கையால் கொல்லப்படுவது ஒரு பாக்கியமேயாகும். ஆனால் பலாத்காரமாகப் பெண்களை கடத்திக்கொண்டு போய் மதமாற்றம் செய்தால் என்ன செய்வது என்று கேட்கக் கூடும். யாரையும் பலாத்காரமாக மதமாற்றம் செய்ய முடியாது என்று கூறினால் போதாது. இந்தியப் பெண்கள் நாம் என்ன செய்வோம் என்று ஏன் அஞ்சவேண்டும்? மனோதைரியமென்பது ஆண்களுக்கு மட்டும் சொந்தமான ஒரு பொருளா? ஜான்ஸி ராணி வாளேந்தி வீரர்களை எமலோகம் அனுப்பியபோதிலும் சாதாரணமாகப் பெண்கள் வாளேந்தும் வழக்கமில்லை. எல்லோரும் ஜான்ஸிராணி ஆகமுடியாது. ஆனால் மகாப்பெரிய பராக்ரமசாலியான ராவணன் கூடத் தொடமுடியாதபடி இருந்த சீதையைப் போல் எல்லாப் பெண்களும் இருக்கமுடியும். ஜான்ஸி ராணிகளை வென்று விடமுடியும்.

சீதையைப்பற்றிக் கூறுவது புராணக்கதை என்று தள்ளிவிடவேண்டாம். ஆப்ரிக்காவின் மத்தியபாகத்தில் துணி தரியாமல் காட்டு மிராண்டிகளாக இருந்த நீக்ரோ ஜாதியாரிடம் கொஞ்சமும் பயமில்லாமல் போகவும வசிக்கவும் துணிந்த ஆலிவ்டோக் என்னும் பெண்மணியைப் போல் நம்முடைய பெண்களும் உன்னதமான மனோதைரியத்தை வளர்த்து வரவேண்டுமென்று விரும்புகின்றேன். பலாத்காரமாகத் தூக்கிப்போகாதபடி போலீஸும் ராணுவமும் பாதுகாக்கக் கூடும். ஆனால் ஏற்கனவே தூக்கிக் கொண்டு போகப் பட்டவர்களுடைய கதி என்ன? போலீஸும் ராணுவமும் இருந்தும் கூட தூக்கிக் கொண்டு போகப்பட்டால் அந்தப் பெண்கள் செய்யக் கூடியதுயாது? அவர்கள் தங்களுடைய தலை ரோமத்தில் ஒன்றுக்குக் கூட தீங்குநேருமுன் உயிர் துறக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தன்னுடைய தொண்டையை நெரித்தோ நாக்கைக் கடித்தோ தன்னைத்தானே கொன்று கொள்வது ஒவ்வொரு பெண்ணுக்கும் சாத்தியமான காரியமாகும்."

அவமானத்திற்கு முன் மரணம்

காந்தியடிகள் முதல் நாள் பெண்களுக்கு கூறிய முறையை மறு நாள் மாலையில் மாற்றிக் கூறினார். யாரும் தன்னுடைய தொண்டையை நெரித்தோ தன்னுடைய நாக்கைக் கடித்தோ தன்னை மாய்த்துக் கொள்ளமுடியாதென்று டாக்டர் சுசிலா நையாரும் டாக்டர் பி. சி. ராயும் காந்தியடிகளிடம் கூறினார்கள். நினைத்த மாத்திரத்தில் தானே தன்னை மாய்த்துக்கொள்வதற்கு வைத்தியர்களுக்குத் தெரிந்த ஒரேமுறை சரியான அளவில் விஷத்தை சாப்பிடுவது ஒன்றுதான் என்று அவர்கள் கூறினார்கள்.

அதனால் காந்தியடிகள் மறுநாள் பிரசங்கத்தில் டாக்டர்கள் கூறியதைக் கூறிவிட்டு கீழ்க்கண்டவாறு சொன்னார் :—

“அப்படியானால் அவமானம் ஏற்படுமென்று தெரியும் சமயத்தில் அவமானம் ஏற்படுவதற்கு முன்னதாக விஷத்தைச் சாப்பிடும்படி யோசனை கூறுகிறேன். ஆனால் யோகமுறையால் உயிரை மாய்த்துக் கொள்ளமுடியுமென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதைப்பற்றி விசாரிக்க எண்ணியிருக்கிறேன். நான் பயனற்ற காரியம் எதையும் சொல்லவில்லை. அவமானம் ஏற்படுவதற்கு முன் உயிரைத் துறக்க மனத்தை திடப்படுத்திக் கொள்வதே எதிரியை எதிர்ப்பதற்கு வேண்டிய தைரியத்தை அளித்துவிடும். ஒரு பெண்ணினுடைய க்ஷேமமெல்லாம் கணவனுடன் வாழ்வதும் கணவன் இறந்து போனால் உடன் கட்டை ஏறுவதும் தான் என்று எண்ணும்படியாக இந்த நாட்டிலுள்ள பெண்கள் வளர்க்கப்பட்டு வருகிறார்கள். இந்திய நாட்டிலுள்ள பெண்கள் ஏதேனும் அபாயம் வந்தால் என்ன செய்வோம் என்று விழிப்பதை விட ஆயுதங்களை உபயோகிக்கும்படி பயிற்சி பெறுவதே நல்லதென்று எண்ணுகிறேன். இப்பொழுது பெண்கள் உடைவாளும் கைதுப்பாக்கியும் வைத்துக் கொள்ளும் வழக்கம் அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனால் எதிரி அதிகமான பலமுடையவனாயிருந்தால் மானத்தைக் காப்பதற்கு ஆயுதங்கள் மட்டும் வைத்துக் கொண்டிருப்பதுபோதாது. ஆயுதங்கள் நம்முடையபலவீனத்தைக் காட்டுமேயன்றி பலத்தைக் காட்டா. ஆயுதங்களைப் பிடிங்கிக் கொண்டால் அடி பணிய வேண்டியதே தவிர வேறு எந்த மார்க்கமும் கிடையாது.

நான் முஸ்லிம்கள் செய்யும் அட்டூழியங்களைக் கண்டிக்கத் தயாராயிருப்பதாகவும் ஹிந்துக்கள் செய்யும் அட்டூழியங்கள் விஷயத்தில் ஒன்றும் கூறாமல் மௌனமாய் இருந்து விடுவதாகவும் ஒரு முஸ்லிம் நண்பர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அவருடைய குற்றச்சாட்டுக்கு ஆதாரம் கிடையாது என்று மட்டுமே நான் சொல்ல முடியும். நான் மனிதர்கள் எல்லோரையும் உடன் பிறந்த சகோதரர்களாகவே பாவிக்கின்றேன்.”

கதர் ஸ்தாபனம்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் கடைசிக் கூட்டத்தில் சங்கத்தின் அதிகாரத்தை நாட்டிலுள்ள கதர் ஸ்தாபனங்களுக்கு பிரித்துக் கொடுப்பது பற்றி பலர் காந்தியடிகளிடம் கேள்விகள் கேட்டார்கள். ஒவ்வொரு பிரதேசத்திலும் மேற்கொள்ள வேண்டிய கதர் கொள்கையை வகுப்பதற்கு அந்தப் பிரதேசத்திலுள்ள கதர் ஸ்தாபனத்திற்கே பரிபூர்ணமாக அதிகாரத்தைக் கொடுத்து விடவேண்டுமென்றும் மத்திய ஸ்தாபனம் எவ்விதத்திலும் அதைக் கட்டுப் படுத்தக் கூடாதென்றும் யோஜனை கூறப்பட்டது. அது சம்பந்தமாக காந்தியடிகள் கூறியதாவது :—

“அங்கங்கேயுள்ள கதர் ஸ்தாபனங்களுக்கு அதிகாரத்தையும் பொறுப்பையும் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பதை நான் பூர்ணமாக ஒப்புக் கொள்கிறேன். ஆனால் கதர் ஊழியர்களுக்குப் பதிலாக பயிற்சி பெறாத ஆண்களையும் பெண்களையும்கொண்டு அங்கங்கே கமிட்டிகள் ஏற்படுத்துவதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். கதர் வேலையை ஒழுங்கான விதத்தில் நடைபெறும்படி செய்வதற்குத் தேவையானது யாதெனில் கதர் விஷயத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களும் கணக்கு வைத்துக் கொள்ளக் கூடிய திறமையுள்ளவர்களும் சேவை செய்ய வேண்டுமென்ற ஆவல் நிறைந்தவர்களும் சேர்ந்த ஒரு கமிட்டியேயாகும். கதர் வேலையில் சுயநலத்துக்கும் அதிகார மோகத்துக்கும் இடமிருக்கக் கூடாது. அதிகார மோகமானது காங்கிரஸைப் பிடித்த சனியனாக இருந்து வருகிறது. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் பொய்யும் சூதும் புகுந்து விட்டன. அவைகளை நீக்குவதற்காகவே காங்கிரஸ் சபையை ஊழியர்கள் ஸ்தாபனமாக மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் யோசனை கூறி வருகிறேன். கதர் வேலையில் ஜனநாயக அம்சத்தைப் புகுத்துவது கதரைக் கொல்வதாக முடியும். காங்கிரஸ் ஜனநாயக ஸ்தாபனமாக இருப்பது போல சர்க்கா சங்கம் ஜனநாயக ஸ்தாபனம் அல்ல. அது ஜனநாயகத்தை வளர்ப்பதற்காக காங்கிரஸால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமாகும். இங்கிலாந்திலுள்ள பாங்கைப்போல சர்க்கா சங்கம் முற்றிலும் ஒரு நிர்வாக ஸ்தாபனமேயாகும். ஆனால் ஒரே ஒரு வித்தியாஸம் தான் உண்டு. பாங்குக்கு உள்ள லாப நோக்கம் சர்க்கா சங்கத்தில் கிடையாது. பொதுநல நோக்கமே யுண்டு. ஜனநாயக ஸ்தாபனத்தால் சிருஷ்டிக்கப்பட்ட நிர்வாக ஸ்தாபனத்தை ஜனநாயக வோட் முறையைக் கொண்டு நடத்த முடியாது.

நாம் கிராமங்களில் போய் இருந்துகொண்டு சேவை செய்ய எண்ணுகிறோம், கதர் ஊழியர்களுடைய ஆயுதங்கள் உபதேசமும் சேவையும் மட்டும்தான். கதர் ஊழியர் எப்பொழுது வேறு ஆயுதத்தைக் கைக்கொள்ள விரும்புகிறாரோ அப்பொழுதே அவர் கதரைக் கொன்று விடுகிறார்.”

அப்பொழுது ஒரு நண்பர் “கதரை எல்லோரும் மேற்கொள்ளும்படி செய்ய வேண்டுமானால் எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற வேண்டியது அவசியமில்லையா?” என்று கேட்டார்.

காந்தியடிகள் :—

“கதர் ஊழியர்கள் முற்றிலும் ஜனங்களுடைய ஊழியர்களாகவே இருப்பார்கள். ஆதலால் அவர்களை ஜனங்கள் ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. சேவை செய்வதின் மூலம் ஜனங்கள் ஆதரித்தால் அப்படி ஆதரிப்பவர்கள் கதர் ஊழியர்களுக்கு பலம் பொருந்திய உதவியாய் இருப்பார்கள். ஆனால் வெறும் கமிட்டி மட்டுமிருக்குமானால் அது உதவியாயிராது. இடைஞ்சலாகவே இருக்கும்.

மற்றொரு நண்பர் “அங்கங்கேயுள்ள கதர் ஸ்தாபனங்களுக்கு அதிகாரத்தைப் பிரித்துக் கொடுத்து விட்டால் அகில பாரத சர்க்கா சங்கத்துக்கு எவ்வித அதிகாரம் எஞ்சி யிருக்கும்” என்று கேட்டார்.

காந்தியடிகள் :—

சர்க்கா சங்கத்தின் அதிகாரம் ஆத்மீக அதிகாரமாகவே இருக்கும். ஆனால் அதே காரணத்தினால் அது இப்பொழுது உள்ளதைவிட அதிக பலம் பொருந்தியதாக இருக்கும். அதனுடைய வேலை பணமோ சாமான்களோ கொடுப்பதாக இராது. கதர் வேலை ஒழுங்காக நடைபெறுவதற்கு வேண்டிய ஆத்மீக உதவியை அளிப்பதாகவே யிருக்கும். கதர் ஊழியர்களுக்கு தன்னுடைய பெயரை உபயோகித்துக் கொள்ள அனுமதி அளிக்குமே யன்றி தன்னுடைய இஷ்டம் போல் நடக்க வேண்டுமென்று அவர்களைக் கட்டாயப்படுத்தாது. அதனுடைய கொள்கையை ஆதரிப்பவர்களுக்கெல்லாம் அதனுடைய ஆத்மீக செல்வாக்குக் கிடைக்கும்.

இப்பொழுது எந்த மாகாணக் கதர் ஸ்தாபனமாவது சுயராஜ்ய ஸ்தாபனமாக காரியங்கள் நடத்தக் கூடிய தகுதியுடையதாயிருந்தால் சர்க்கா சங்கத்தினிடமுள்ள ஐவேஜுகள் அதனிடம் ஒப்புவைக்கப்படும். அந்த ஸ்தாபனம் அவைகளைச் சரியானபடி உபயோகிப்பதாகவும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின் அவைகளைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும் உறுதி கூறவேண்டும். சர்க்கா சங்கத்துக்கு மேற்பார்ப்பதற்குள்ள உரிமையுண்டு. ஆனால் அதையும் கூட மாகாண ஸ்தாபனம் விரும்பினால் தான் உபயோகிப்பார்கள்.”

புது தில்லி, — 18-10-46 — பியாரேலால்.

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: பொ. திருகூடசுந்தரம், நாமக்கல் கவிஞர்

அக்டோபர் 27 ஞாயிறு 1946


## கதரா? மில் துணியா?

சென்னையில் வியாபார சங்கம் போன்ற பெரிய முதலாளிகளும் காங்கிரஸ்காரர்களில் சிலரும் சென்னை பிரதம மந்திரியிடம் கோபப்பட ஆரம்பித்திருக்கிறார்கள் என்று எனக்கு அனுப்பப்பட்டுள்ள சென்னை பத்திரிகைகளிலிருந்து தெரிகிறது. அவர்கள் சுயநலத்தின் காரணமாகவும் அறியாமையின் காரணமாகவுமே பிரதம மந்திரி மீது குறை கூறுகின்றார்களென்று எனக்குத் தோன்றுவதாக நான் வருத்தத்துடன் கூறுகின்றேன்.

இந்த விவாதத்தில் என்னுடைய பெயரையும் இழுத்துப் போட்டிருக்கிறார்கள். பிரச்னை சிக்கலல்லாத மிகவும் சுலபமான பிரச்னை ஆகும். அதைக் காய்தல் உவத்தல் இன்றி விவாதிக்கும்பொழுது நான் பிரதம மந்திரியினுடைய திட்டத்தை ஆதரிக்கிறேன் என்பதை மறந்துவிட வேண்டும்.

ஆராய வேண்டிய கேள்வி இதுவே:—சென்னை சர்க்கார் இப்பொழுது உள்ள துணி உற்பத்தியை இரண்டு மடங்கு ஆக்குவதற்காக புது மில்கள் ஏற்படுத்தவோ பழைய மில்களை விரிவாக்கவோ ஆதரவு கொடுத்தால் கதர் சென்னை மாகாணத்தில் எல்லோரும் கைக்கொள்ளக் கூடிய காரியமாக ஆகுமா? மில் துணிக்கு இப்பொழுது பலவிதத்திலும் அதிக உதவி செய்யப்பட்டு வருகிறது. ஜப்பான் இந்தியாவுக்கு காலிக்கோ துணி அனுப்பிக் கொண்டிருந்தபொழுது அந்தத் துணி, துணியாக நெய்வதற்கு எவ்வளவு பருத்தி வேண்டுமோ அவ்வளவு பருத்தியின் விலையை விடக் கூட குறைந்த விலைக்கு விற்றுக் கொண்டிருந்தது. அதே மாதிரி இந்தியாவிலுள்ள மில்களும் அப்படிக் குறைவான விலைக்கு விற்க முடியும். அந்த மாதிரி மில் துணிகளை குறைவான விலைக்கு கிராமங்களில் கொண்டுபோய் தள்ளினால் கிராமத்திலுள்ள ஜனங்கள் சென்னை சர்க்கார் கதர் அபிவிருத்தி செய்வதாகச் சொல்வது வெறும் விளையாட்டான காரியமே என்று எண்ணமாட்டார்களா? இதை அறிந்து கொள்ள முடியாதபடி அவர்கள் அவ்வளவு முட்டாள்களா ?

கிராமத்து ஜனங்களுக்கு எப்பொழுதும் வேலை இருந்து கொண்டிருப்பதில்லை. அதனால் அவர்களுக்கு வேண்டிய துணியை நெய்வதற்குத் தேவையான அளவு நூலை நூற்கும்படி செய்வதே சென்னைத் திட்டமாகும். ஜனங்கள் சோம்பலாக உள்ள நேரத்தில் உபயோகமானதும், தேச நன்மைக்கு உகந்ததுமான வேலையைச் செய்யும்படி தூண்டுவதும் எதிர்பார்ப்பதும் வெறுங் கனவென்று தள்ளிவிட முடியுமா ?

வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு உபயோகமானதும் அதிக ஊதியம் தருவதுமான வேலையைத் தேடித்தருவதற்கு அனுபவ சாத்தியமான வேறு ஒரு திட்டத்தை வகுக்க முடியுமானால்தான் சென்னை சர்க்காரைக் கண்டிக்க முடியும். யோக்கியமாக ஊழியம் செய்யும் தேச ஊழியர்களை லட்சியவாதிகள் கனவு காண்பவர், பைத்தியக்காரர்கள் என்று தள்ளிவிடுவது கௌரவமான காரிய மன்று.

முதலாளிகளும் அவர்களைப்போல் சுகஜீவியம் செய்து வரும் பிரமுகர்களும், ஏழை கிராமவாசிகளுக்கு விரோதமாக எழுந்து கிராமவாசிகள் கௌரவமான வேலையைச் செய்து தங்கள் கஷ்டமான ஜீவியத்தைக் கொஞ்சம் சௌகரியமாகச் செய்துகொள்ள மேற்கொள்ளும் முயற்சிகளை தடுக்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்னைத் திட்டத்தில் புது மில்களைப் பற்றிய பெரிய குறை என்னால் கண்டுபிடிக்கப் பட்டது. புது மில்கள் ஏற்படுத்துவதும் கதரைப் பரவச்செய்வதும் ஏக காலத்தில் நடக்க முடியாது என்பதை ஜவுளி கமிஷனர் மனமார அறிந்து கொண்டபிறகுதான் அவர் அதைச் சென்னை சர்க்காருக்கு சிபார்சு செய்யத்துணிந்தார். அந்தத் திட்டம் அனுபவ சாத்தியமாக இல்லாமல் ஆகிவிடுமானால் அவருடைய பெயர் கெட்டுப்போகுமேயன்றி திட்டத்தை குறை கூறுகிறவர்களுடைய பெயர் கெட்டுப் போகாது.

(1) இந்தக் கதர்வேலை ஜன நாயக சர்க்கார் நடத்தும் ஜன நாயக வேலையாகும்.

(2) அதனால் அது எங்கே நடத்தப்படுகின்றதோ அந்த இடத்திலாவது பொது ஜன ஆதரவைப் பெற வேண்டும்.

(3) அது ஒரு மனுஷனுடைய திட்டமாய் இராமல் சர்க்கார் முழுவதும் செய்யும் திட்டமாக இருக்க வேண்டும்.

(4) அதற்குச் சட்ட சபையின் ஆதரவும் இருக்க வேண்டும்.

(5) எந்த விதத்திலும் நிர்ப்பந்த வாசனை இம்மி கூட இருக்கக்கூடாது.

(6) அது அனுபவ சாத்தியமானதாகவும் ஏழைகளுக்கு நன்மை செய்வதாகவும் இருக்கவேண்டும்.

கதர் திட்டம் வெற்றியடைவதற்கு இந்த நிபந்தனைகள் இன்றியமையாதவை. இவைகளைக் காகிதத்தில் எழுதி சென்னை சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் தங்களுக்குள்ளும் நிபுணர்களுடனும் பூரணமாக விவாதித்தபிறகே அவர்கள் அவைகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள்.

இப்பொழுது சென்னை மாகாணத்திலுள்ள துணி மில்களைத் தற்சமயம் தொடப் போவதில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். என்றேனும் ஒருநாள் கதர்த் திட்டமானது காட்டுத் தீ போல் நாடெங்கும் பரவு மென்று எண்ணுகிறேன். அப்பொழுது துணி மில்கள் எல்லாம் பாதிக்கப்படும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அந்த நாள் வந்தால் அப்பொழுது பெரிய முதலாளிகள் வருத்தப்படாமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆகவே, இப்பொழுது ஆராய வேண்டிய ஒரே கேள்வி யாதெனில், சென்னை சர்க்கார் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கு வேண்டிய நாணய புத்தியும் திறமையும் உடையவர்களா என்பதுவேயாகும். அவர்களுக்கு அவை இருந்தால் அவர்களை எல்லோரும் ஆசீர்வதிக்க வேண்டும். அவர்கள் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். அவர்களுக்கு அந்தக் குணங்கள் இல்லாவிட்டால் சகலமும் கெட்டுப் போகும்.

புது தில்லி, — 17-10-46 — மோ. க. காந்தி.

## விஷயத்தை விளக்கும் புள்ளி விபரங்கள்.

சென்னை ஜவுளி கமிஷனர் திரு. எஸ். வெங்கட்டேஸ்வரன் கதர் திட்டம் சம்பந்தமாக டில்லிக்கு வந்திருந்தபோது சென்னை மாகாணத்து ஜனங்கள் எல்லோருக்கும் கதர் கொடுக்க வேண்டுமானால் எவ்வளவு துணி வேண்டும் என்று அவரிடம் கேட்

டேன். அவர் தந்த புள்ளி விபரங்கள் விஷயத்தை வெகு தெளிவாக விளக்குகின்றன:—

சென்னைமாகாண ஜனத்தொகை 530-லட்சம்.

குடும்பங்கள் $132\frac{1}{2}$-லட்சம்.

தினசரி 1-மணி நேரம் நூற்கக்கூடிய நூல் $\frac{3}{8}$-சிட்டம்.

ஒரு குடும்பத்தில் ஒருவர் நூற்ருல் 1-வருஷத்தில் நூற்கக் கூடியநூல் 135-சிட்டம் (சுமார் 10-ராத்தல் அதாவது 30 கெஜம் துணி).

சென்னை மாகாணம் முழுதும் 3975-லட்சம் கெஜம் துணி.

ஆளுக்கு 20-கெஜம் குழந்தைக்கு 10-கெஜம் வீதம் 530-லட்சம் ஜனங்களுக்கு, வேண்டிய துணி 9000-கெஜம் துணி.

உற்பத்தியாகும் துணி 44-சதமானம்.

ஆதலால் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் தினந்தோறும் $2\text{-}\frac{1}{2}$ மணிநேரம் நூல் நூற்க வேண்டும் அல்லது இரண்டு குடும்பங்களில் ஐந்து பேர் நூற்க வேண்டும்.

தேவையான கைத்தறிகள் :—ஒரு கைத்தறி மாதம் 125 கெஜம் வீதம் 9000 கெஜம் நெய்யத் தேவையான கைத்தறிகள் 6 லட்சம். மாகாணத்திலுள்ள கைத்தறிகள் 5 லட்சத்துக்குக் கொஞ்சம் அதிகம். அதனல் இன்னும் 75 ஆயிரம் கைத்தறிகள் தேவையாகும்.

ஆகவே, நாட்டிலுள்ள 8 பேரில் 5 பேர் தினந்தோறும் ஒரு மணி நேரம் தாய் நாட்டின் க்ஷேமார்த்தமாக நூற்க வேண்டும் என்று கூறுவது அசாத்தியமான காரியமா?

புது தில்லி. — 18-10-46 — மோ. க. காந்தி.

## சர்க்கா சங்கம்

1. சர்க்கா சங்கத்தின் மெம்பர்கள் மாதம் 320 சுற்று வீதம் வருஷத்தில் 6 சிட்டம் நூல் தருகிருர்கள். சங்கம் குறிப்பிடும் நாட்களிலும் இடத்திலுமே நூற்க வேண்டும். மெம்பர்கள் தாங்களே திரிகளைத் தயார் செய்துகொள்ள வேண்டும். அவர்கள் "துணைவர்கள்" என்று அழைக்கப்படுவார்கள்.

2. துணைவர் பிரவேசக் கட்டணம் ரூபாய் 1. மாத சந்தா 300 சுற்று நூல்.

3. இரண்டு மாதங்கட்கு சந்தா கொடுக்காவிட்டால் பெயர் நீக்கப்படும். மறுபடியும் சேர விரும்பினல் மறுபடியும் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும். ஒரே வருஷத்தில் மூன்ருவது முறை சேரமுடியாது.

4. ஒவ்வொரு ஊரிலும் சங்கம் அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் மாகாணத்துக்கும் ஒரு மத்திய சங்கம் அமைக்கலாம்.

5. ஒவ்வொரு மாதமும் ஒரு தினத்தை தேசிய தினமாக ஏற்பாடு செய்து கொண்டு சகல சங்கத்தாரும் அந்தத் தினத்தில் எல்லோரும் ஒன்று சேர்ந்து நூற்க ஏற்பாடு செய்யவேண்டும்.

6. சங்கங்கள் ஏற்படுத்துவதோடு நூற்கக் கற்றுக் கொடுக்க வகுப்புகள் ஏற்படுத்தவும் முயற்சி செய்ய வேண்டும். இந்த வகுப்புக்களில் பருத்தி அரைத்தல் பஞ்சு வெட்டுதல், திரிபோடுதல், நூல் நூற்றல் ஆகியவை எல்லாம் கற்றுக் கொடுக்கவேண்டும். பிரவேசக் கட்டணம் ஒரு ரூபாய். இந்த வகுப்பில் சேர்ந்து ஒரு மாத காலத்துக்குள் சங்கத்தில் சேர்வதானல் சங்கத்துக்கு வேருகப் பிரவேசக் கட்டணம் தர வேண்டியதில்லை. 320 சுற்று நூல் மட்டும் கொடுத்தால் போதும்.

7. மாதந்தோறும் நூற்கப்படும் நூல் சங்கத்தைச் சேர்ந்ததாயினும் நூல் நூற்பவர் அந்த நூலுக்குக் கதர் வாங்கிக் கொள்ளலாம். இந்த மெம்பர்களுக்குக் கொடுத்த பிறகு தான் மற்றவர்களுக்குக் கதர் கொடுக்கப்படும்.

கனு காந்தி.

தோட்டிகள் சேரியில் மூன்று முறை நூற்கும் வகுப்புக்கள் நடத்தியதன் பலனகவே இந்த சர்க்கா சங்கத் திட்டம் உருவாகியிருக்கின்றது. இத்தகைய சங்கங்கள் நாடெங்கும் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேன். ஆயினும் இப்பொழுதே டில்லியில் அநேக சங்கங்கள் அமைத்தாக வேண்டும். இங்கே வேடிக்கைக்கும் விளையாட்டுக்கும் பல சங்கங்கள் இருக்கின்றன. தேசிய வேலைக்காகவும் சங்கங்கள் பல ஏற்படுத்தினல் என்ன?

புது தில்லி — 18-10-46 — மோ. க. காந்தி

## மரண ஆலிங்கனம்

பம்பாயில் கலகம் நடந்த பொழுது ஒரு ஹிந்து ஒரு முஸ்லிம் நண்பருக்கு அடைக்கலம் அளித்தார். இதைக்கண்டு ஹிந்துக்கும்பல் கோபாவேசம் கொண்டது. முஸ்லிமை வெளியே விடும்படி கூப்பாடுபோட்டது. ஹிந்து நண்பர் தம்முடைய முஸ்லிம் நண்பரை அவர்களிடம் ஒப்புவிக்க விரும்பவில்லை. அவர் முஸ்லிம் நண்பரை கூட்டிக் கொண்டுபோய் எங்கள் இருவரையும் கொல்லுங்கள் என்று கூறி முஸ்லிம் நண்பரைக் கட்டி அணைத்துக் கொண்டார். அந்த நிலைமையிலேயே அவர்கள் இருவரும் கொல்லப்பட்டு வீழ்ந்தார்கள். இந்தச் செய்தி உண்மையானதாகும். இந்தமாதிரி ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் பாதுகாப்பு அளித்ததற்கு இது தான் முதல் உதாரணமென்று எண்ண வேண்டாம். கல்கத்தாவில் சமீபத்தில் அட்டூழியங்கள் நடந்த பொழுது முஸ்லிம்களும் ஹிந்துக்களும் தங்கள் உயிரைப் பொருட்படுத்தாமல் பரஸ்பரம் பாதுகாப்பு அளித்திருக்கிருர்கள். மனிதனிடத்திலுள்ள தெய்வ அம்சம் எந்தச் சமயத்திலேனும் எந்த இடத்திலேனும் இப்படி வெளித்தோன்ருமல் இருக்குமானல் மனிதஜாதி அடியோடு அழிந்துபோகவே செய்யும்.

பம்பாயில் முஸ்லிம்கள் கோபாவேசத்துடன் ஹிந்துக்களை தாக்கியபோது இரண்டு வாலிபர்கள் தங்கள் உயிருக்கு நிச்சயமாக அபாயம் வரும் என்று அறிந்திருந்த போதிலும் முஸ்லிம்களை சமாதானப் படுத்துவதற்காகச் சென்று உயிர்துறந்த விஷயத்தை பம்பாய் பிரதம மந்திரி திரு பாலசாஹிப் கெர் வெகு அழகாக வர்ணித்திருக்கிருர். அந்த வாலிபர்கள் மரணத் தங்களுடைய உண்மையான நண்பனகக் கருதியே வரவேற்றிருக்கிருர்கள். அத்தகையத் தியாகம் புனிதமானதாகும். அதனுடைய அளவற்ற மகிமையை யாரும் மறுக்க முடியாது. அத்தகைய செயல் ஒவ்வொன்றும் நாம் எண்ணுகிற மாதிரி வெற்றி பெறுமேயானல் அது உண்மையான தியாகமாகாது, போலித் தியாகமாகவே இருக்கும். இத்தகையத் தியாகச் செயல்கள் போதுமான அளவு அதிகப்படுமானல் மதத்தின் பேரால் நடைபெறும் இந்த முட்டாள்தனமான கொலைபாதகங்கள் நின்றுவிடும். ஆனல் ஒரே ஒரு இன்றியமையாத நிபந்தனையுண்டு. தியாகம் உண்மையாக இருக்க வேண்டும். போலியாக இருக்கக் கூடாது. நாம் அகத்தில் எப்படி இருக்கிருேமோ அப்படியே தான் புறத்திலும் தோன்ற வேண்டும்.

புது தில்லி, மோ. க. காந்தி.

மானத்தைப் பெரிதாக மதிப்பவர் மரணத்தைத் திரணமாக மதிப்பார். மரண பயத்தைத் துறப்பதே சுயராஜ்யம் —காந்திஜி

## மத்திய மாகாணத்தில் மதுவிலக்கு

மத்திய மாகாணத்தில் 1937–ம் வருஷத்தில் நடைபெற்ற காங்கிரஸ் சர்க்கார் அந்த வருஷத்தின் இறுதியில் கள் உள்பட சகல மதுபானங்களையும் பரிபூர்ணமாகத் தடுத்து விடுவது என்ற கொள்கையை மேற்கொள்ளத் தீர்மானித்தார்கள். அதன்படியே மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 1938 ஏப்ரல் முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1940-வருஷத்தில் 22 ஆயிரத்து இருநூற்று எண்பத்தைந்து சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள இடத்தில் அதாவது மாகாணத்தின் 4-ல் ஒரு பங்கு இடத்தில் மதுவிலக்கு நடத்தப்பட்டது. 1945 ஜனவரி மாதம் முதல் தேதியில் காட்னி, முர்வாரா பட்டணத்தில் மதுவிலக்கை அமுல் நடத்தாமல் நிறுத்தி வைத்தார்கள். ஆனால் இப்பொழுதுள்ள சர்க்கார் அதை 1946-ல் அக்டோபர் முதல் தேதி முதல் மறுபடியும் அமுல் நடத்தவும் மேற்கொண்டு பதினேழாயிரத்து முன்னூற்றறுபது சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள இடத்தில் அமுல் நடத்தவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆகவே இப்பொழுது மதுவிலக்கு முப்பத்தி ஒன்பதினாயிரத்து அறுநூற்று நாற்பத்தி மூன்று சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள இடத்தில் அதாவது மாகாணத்தில் ஏறக்குறைய பாதி இடத்தில் நடந்து வருகிறது.

மதுவிலக்கு ஏற்படுத்தியதால் 45 லக்ஷ ரூபாய் நஷ்டமாயிருக்கிறது. இன்னும் வெகு சீக்கிரத்தில் சர்க்கார் மாகாண முழுவதும் மதுவிலக்கை ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள். அப்பொழுது அவர்களுக்கு சாராயத்திலும் கள்ளிலுமாக ஒன்றரை கோடி ரூபாய் நஷ்டமாகும்.

கலால் உத்தியோகஸ்தர்கள் கள்ளத்தனமாக மது உற்பத்தி செய்வதைத் தடுக்கும் விஷயத்திலும் கண்டு பிடிக்கும் விஷயத்திலும் அவசியமானால் சட்ட சபை மெம்பர்களுடைய உதவியையும் காங்கிரஸ் கமிட்டிகளுடைய உதவியையும் பெற்றுக் கொள்ளும்படியாக சர்க்கார் சொல்லி யிருக்கிறார்கள்.

மதுவிலக்கு திருப்திகரமாக நடக்கும் பொருட்டு சர்க்கார் கீழ்க் கண்ட திட்டங்களை வகுத்திருக்கிறார்கள் :—

(1) சாராயம் காய்ச்சுவதற்கு வேண்டிய 'மாதாஸ்' என்னும் வஸ்துவை யாரும் ஐந்து சேருக்கு அதிகமாக வைத்துக் கொள்ளக் கூடாது அதற்கு அதிகமாக வைத்துக் கொளள விரும்புகிறவர்கள் அனுமதி பெற வேண்டும்.

(2) மது விலக்கு நடக்கும் பிரதேசத்தில் மது விலக்குக் கமிட்டிகள் ஏற்படுத்த வேண்டும். மதுவிலக்கு நடைபெறாத பிரதேசத்தில் மதுவிலக்குக்காக தயார் செய்ய வேண்டும். அதற்காக பொழுது போக்கு இடங்களும் ஜாதி பஞ்சாயத்துக்களும் அமைக்க வேண்டும்.

(3) படங்கள் காட்டுவதின் மூலமாகவும் நோட்டீஸ்கள் ஒட்டுவதின் மூலமாகவும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பதின் மூலமாகவும் மது விலக்குப் பிரசாரம் செய்ய வேண்டும். அதற்காக 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட் டிருக்கிறது,

(4) மதுவிலக்குச் சட்டத்தை விளக்கிக் கூறும் துண்டுப் பிரசுரங்கள் 75 ஆயிரமும் பெரிய சுவரொட்டி நோட்டீஸ்கள் 15 ஆயிரமும் பல பாஷைகளில் அச்சடிக்கப்பட்டு ரயில்வே அதிகாரிகளுக்கும் கலால் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

(5) மதுவிலக்கை சரியானபடி நடத்துவதற்காக மதுபானம் செய்யும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மதுவிலக்கு நடக்கும் பிரதேசத்திலிருந்து மதுவிலக்கு நடக்காத பிரதேசத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

யுத்தத்திற்கு முன் மதுவிலக்கு அமுலில் இருந்த போது மதுவிலக்கால் ஜனங்களுக்கு ஏற்பட்ட நன்மைகளைக் குறித்து அப்பொழுது வெளியான சர்க்கார் அறிக்கைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறது :-

"மதுபானம் செய்து கொண்டிருந்தவர்கள் அதை விட்டுவிட்ட படியால் அவர்களுடைய ஒழுக்கமும் தேகாரோக்கியமும் பொருள் நிலையும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் மதுபானத்தை நிறுத்தி விட்டதால் மிஞ்சிய பணத்தைக் கொண்டு நல்ல விதமாக வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். இப்பொழுது அவர்கள் முன்னிலும் அதிக சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் போதுமான உணவும் போதுமான உடையும் பெற்று வருகிறார்கள். இப்பொழுது வீடுகளில் சண்டை சச்சரவுகள் இல்லாததால் மதுவிலக்கின் நன்மையைக் குறித்து பெண்களே அதிகமாகப் புகழுகிறார்கள். தங்கள் கணவர்கள் முன்னிலும் அதிகமாக நம்பத் தகுந்தவர்களாகவும் வேலையை ஒழுங்காய்ப் பார்ப்பவர்களாகவும் இருப்பதாய்க் கூறுகிறார்கள். கணவர்கள் இப்பொழுது குடித்து வெறி கொள்ளாததால் அவர்களை மற்றத் தீய வழக்கங்களிலிருந்து விடுவிப்பது எளிதாயிருக்கிறது என்று கூறுகிறார்கள்."

இதை வாசிக்க சந்தோஷமா யிருக்கிறது. இப்பொழுது நடைபெறும் மதுவிலக்கு இன்னும் அதிகமான சந்தோஷத்தைத் தருமென்று நம்புகிறேன்.

புது தில்லி — 14-10-46 — பியாரேலால்

## அகில பாரத சர்க்கா சங்கம்

அகில பாரத சர்க்கா சங்கம் 10-10-46-ல் நிறைவேற்றியத் தீர்மானங்கள் :—

1. இப்பொழுது இந்தியாவிலும் மலேயா போன்ற இதர தேசங்களிலும் துணிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதை ஒழிப்பதற்கு கைராட்டினத்தையும் கைத்தறியையும் உபயோகிப்பதே சரியான மார்க்கமென்று அகில பாரத சர்க்கா சங்கம் தன் அனுபவத்தின் காரணமாக நம்புகிறது. கையால் நூற்று கையால் நெய்து கதர் உற்பத்தி செய்வது பண்டைக் காலத்திலிருந்து இந்தியா தேசத்தில் மட்டும் தான் நடந்து வருகிறது. ஏராளமான நூல் மில்களும் துணி மில்களும் இருந்தபோதிலும் இந்தக் காலத்தில் கையால் நூற்று கையால் நெய்த சுத்தமான கதரை பரப்ப அகில பாரத சர்க்கா சங்கம் 25 வருஷ காலமாக வேலை செய்துகொண்டு வருகிறது. அந்தக்காலத்தில் ஏழைகளான நூற்பவர்களுக்கும் நெய்பவர்களுக்கும் கூலியாக சுமார் ஏழு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது.

2. கிராமக் கைத்தொழில்களின் முக்கியத்வத்தை உணர்ந்து கதர் வேலை செய்ய விரும்பும் சர்க்கார்கள் கீழ்க்கண்ட விதமாக வேலை செய்ய வேண்டும்:—

(அ) ஆரம்ப பாடசாலைகளிலும் நடுத்தர பாடசாலைகளிலும் ஆசிரியர் பயிற்சி பாடசாலைகளிலும் உள்ள மாணவர்கள் எல்லோருக்கும் நூல் நூற்கும்படியாக ஐந்து வருஷதிட்டமொன்று வகுக்கவேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு கைத்தறியாவது வேலை செய்ய வேண்டும். இந்தப் பள்ளிக்கூடங்களில் மூலாதாரக் கல்வியை எவ்வளவு சீக்கிரமாகவும், எவ்வளவு விரிவாகவும் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகவும்விரிவாகவும்ஏற்படுத்தப்படவேண்டும்.

(ஆ) பல நோக்கங்களுடைய கூட்டுறவுச்சங்கங்களை அமைக்கவேண்டும். அவைகளின் மூலமாக கதர்

காற்றில்லாத கால் பந்து ஆட உதவாது. அதுபோல்தான் நிர்மாண வேலைகள் செய்யாத காங்கிரஸ் காரியங்கள் —ராஜாஜி

திட்டத்தை கிராம புனருத்தாரண வேலையில் ஒரு பகுதியாக நிறைவேற்றிவைக்கவேண்டும்.

(இ) இப்பொழுது பருத்தி விளைவிக்கப் படாத இடங்களில் பருத்தியை விளைவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நூற்பவர்களுக்கு பருத்தியும் நூற்பதற்கு வேண்டிய சாதனங்களும் எளிதில் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

(ஈ) கதர் ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்து நிபுணர்களாகச் செய்யவேண்டும். கதர் வேலையின் அபிவிருத்திக்காக ஆராய்ச்சிவேலையும் நடத்தப் பட வேண்டும்.

(உ) நூல் நூற்றல் கிராம முன்னேற்றத் திட்டத்தில் ஒருபகுதியாக இருக்கவேண்டும். ஆதலால் கூட்டுறவு கல்வி, விவசாயம் ஆகிய இலாகாக்களிலுள்ள சிப்பந்திகளும் ஜில்லாபோர்டு கிராமப் பஞ்சாயத்து முதலியவைகளிலுள்ள சிப்பந்திகளும் கதர் பிரவேசப் பரீட்சை கொடுத்துத்தேற வேண்டும். அந்த பரீட்சையில் தேருதவர்களை புதிதாக நியமனம் செய்யக் கூடாது. இப்பொழுது மில் நூலைக் கொண்டு கைத்தறியில் நெய்யும் துணிக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்த வில்லை அதை ஏற்படுத்தவேண்டும். சர்க்கார் நெசவு இலாகாவிலுள்ள கைத்தறிகளிலும் சர்க்கார் நெசவுப் பாடசாலைகளிலுள்ள கைத்தறிகளிலும் கையால் நூற்ற நூலையே உபயோகிக்க வேண்டும். சிறைச்சாலைகளில் நூல் நூற்பதையும துணி நெய்வதையும் ஏற்படுத்த வேண்டும்.

(3) ஆதலால் மாகாண சர்க்கார்களும் சமஸ்தானங்களும் மேற்கண்ட முறைகளையும் வேறு முறைகளையும் கையாண்டு எல்லோரையும் கதரை மேற்கொள்ளும் படி செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள். மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அகில பாரத சர்க்கா சங்கமும் அதன் கிளைகளும் தங்களால் இயன்ற உதவி முழுவதையும் செய்யத் தயாராயிருக்கின்றன.

(4) இந்த முக்கியமான வேலையை நிறைவேற்றும் விஷயத்தில் மில் முதலாளிகள் உதவி செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுருர்கள். எங்கே கையால் நூற்பதும் கையால் நெய்வதும் சாத்தியமாயிருக்குமோ அங்கே மில் துணியை அனுப்பாமல் இருப்பதற்கு சர்க்காரும் மில் முதலாளிகளும் சர்க்கா சங்கத்துடன் கலந்து ஏற்பாடு செய்ய வேண்டும். இத்துடன் புது மில்கள் ஏற்படாதபடியும் இப்பொழுது உள்ள மில்களுக்கு புதிய யந்திரங்கள் வாங்காதிருக்கும்படியும் பார்த்துக் கொள்ள வேண்டும். பருத்தி மில்கள் சர்க்கா சங்கத்தின் யோசனைப் படியும் சர்க்கார் யோசனைப் படியும் நடத்தப்பட வேண்டும். வெளியிலிருந்து நூலும் துணியும் இறக்குமதி செய்யக் கூடாது. மேற்கண்ட காரியங்கள் நடைபெறுவதற்காக வேண்டிய சட்டங்களைச் செய்து அவற்றை அமுல் நடத்த வேண்டும்.

## காங்கிரஸ் மகாசபைக் கூட்டம்

மீரட்டில் நடக்கப் போகும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தைப் பற்றி ஒரு கூடை நிறையக் கடிதங்கள் வந்து குவிந்திருக்கின்றன. ஏராளமாகச் செலவு செய்யப் போவதாகப் பத்திரிகைகளில் வெளி வந்திருக்கும் செய்திகளைப் பார்த்துக் கண்டித்து எழுதியிருக்கிருர்கள். வரவேற்புக் கமிட்டியார் செய்வது சரியா சரி யில்லையா என்பதைப் பற்றி நான் முடிவு கூறமாட்டேன். அது விஷயத்தை ஆராய்வதற்கு எனக்கு விருப்பமுமில்லை. நேரமுமில்லை. ஆயினும் இதை மட்டும் கூறுவேன். வரவேற்புக் கமிட்டியார்க்கு அது உபயோகமா யிருக்கும் என்று நம்புகிறேன்.

காங்கிரஸ் மகா சபை கூடும்போது எவ்வித தமாஷாவும் நடைபெறக்கூடாது. காங்கிரஸ் கூடுவது முக்கியமான விஷயங்களை ஆராய்வதற்காகவே யாகும். வேறு விேனதங்கள் எதுவும் ஏற்படுத்தலாகாது. பொது ஜனங்களைக் கூட்டம் போடும்படி செய்யக் கூடிய காரியம் எதுவும் செய்யக் கூடாது. காங்கிரஸ் கூட்டம் என்றதுமே ஜனங்கள் கூடி விடுவார்கள். அப்படி யிருக்க வேறு விேனதங்கள் எதற்கு? தீபாலங்காரங்கள் கொஞ்சம் கூட நடத்தலாகாது. உணவு மிக எளிய முறையில் நெய்யும் சர்க்கரையும் சேராமல் தயாரிக்கப் படவேண்டும். அழையாமல் வரும் விருந்தினர்கள் வராமலிருந்து விடுவதே நல்லது. வந்தால் தங்கள் உணவையும் கொண்டு வர வேண்டும்.

சுகாதார ஏற்பாடுகள் முதல்தரமானதாகவும் வருகிறவர்கள் எல்லோரும் பார்த்துப் படிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

வேடிக்கை பார்க்க வர யாருக்கும் அனுமதி அளித்தலாகாது.

புது தில்லி — 19-10-46 — மோ. க. காந்தி.

## நியாயமில்லாத பகிஷ்காரம்

குடகு தேசத்திலுள்ள மெர்க்காரா பட்டணத்திலிருந்து ஒரு நிருபர் எழுதுகிருர் :—

"கிராம தேவதைகளுக்கு பலியிடுவது தவறு என்று வாலிபர்கள் அதில் கலந்துகொள்ளா திருக்கிருர்கள். அப்படியானல் நாங்கள் உங்களை பகிஷ்கரித்து விடுவோம் என்று கிராமத்து ஜனங்கள் பயமுறுத்துகிருர்கள். இந்தச் சீர்திருத்தவாதிகள் செய்ய வேண்டியது யாது?"

பதில்:—சீர்திருத்தவாதிகளுடைய காரியம் எப்பொழுதும் கஷ்டமானதுதான். பகிஷ்கரிப்பதாக பயமுறுத்துவதைக் கண்டு அவர்கள் பயந்துவிடக் கூடாது. பகிஷ்காரத்தால் ஏற்படக் கூடிய துன்பங்களை எல்லாம் சகித்துக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டும். கிராமத்து ஜனங்கள் தங்கள் மூடப் பழக்கங்களில் உண்மையாகவே நம்பிக்கை உடையவர்கள். அதனல் அவர்களிடம் சீர்திருத்தவாதிகள் கோபம் கொள்ளலாகாது. ஜனங்களுக்கு அறிவு புகட்டவே வேண்டும். கிராம தேவதைகள் என்று எந்த தேவதையும் கிடையாது. எல்லாம் கிராமத்து ஜனங்களுடைய எண்ணமே யன்றி வேறன்று. சீர்திருத்தவாதிகள் பகிஷ்காரத்தைப் பொருட்படுத்தாமல் இடைவிடாமல் கிராமத்து ஜனங்களுக்கு விஷயத்தை விளக்கிக் கொண்டும் அவர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்து கொண்டு மிருக்க வேண்டும். பொறுமையும் விடா முயற்சியும் மலை போன்ற கஷ்டங்களை எல்லாம் தகர்த்துவிட முடியும். சீர்திருத்த வாதிகள் போலீஸ் உதவியை நாடலாகாது.

புது தில்லி, — 16-10-46 — மோ. க. காந்தி-

## தீபாவளிப் பட்டாசுகள்

தீபாவளி தினத்தன்று பட்டாசுகள் உபயோகிப்பதைக் கண்டித்துப் பல கடிதங்கள் வந்தன. நானும் முன்னல் "நவ ஜீவன்" பத்திரிகையில் கண்டித்து எழுதி யிருந்தேன். ஆனல் அதனல் பலன் உண்டானதாகத் தெரியவில்லை. இப்போது நம்மைச் சூழ்ந்து நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருக்கும்போது தீபாவளி கொண்டாட நியாயம் கிடையாது. கோடிக் கணக்கான மக்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும்போது பட்டாசு விடுவதும் தீபாலங்காரங்கள் செய்வதும் விருந்துகள் நடத்துவதும் பாபமாகும்.

புது தில்லி, — 18.10.46 — மோ. க. காந்தி.

பாரத நாடு என் பாட்டனின் சொத்து, பட்டயத்திற்கென்ன பஞ்சாயத்து ? —நாமக்கல் கவிஞர்

## டாகோர் சமாச்சாரம் யாது?

கேதா ஜில்லாவிலுள்ள நண்பர் ஒருவர் தோட்டி ஆண்களையும் பெண்களையும் தம்முடைய வீட்டில் வைத்துக் கொண்டு உடன் பிறந்த சகோதர சகோதரிகளைப் போலவே நடத்தி வருகிறார்.

அவர் எழுதுகிறார் :—"சென்னை மாகாணத்தில் பெரிய கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மதிமயங்கிப் போயிருக்கும் குஜராத் மாகாணத்திலுள்ள டாகோர் கோவில் இன்னும் திறந்து விடப்படாமலிருப்பது விசித்திரமாயிருக்கிறதல்லவா? மதிமயங்கிய குஜராத் ஜனங்கள் மதி பெறுவார்களானால் இன்றைக்கே அந்தக் கோவிலைத் திறந்து விட்டுவிட முடியும். ஆனால் குஜராத் இந்த வெட்கரமான வழக்கத்தைக் கட்டி அணைத்துக் கொள்வதில் ஆனந்தம்காணுமானால் அதை யாரால் தடுக்க இயலும்?"

புது தில்லி — 18-10-46 — மோ. க. காந்தி.

## இந்தக் கண்ணீர் ஏன்?

குஜராத் வித்யாலயத்தின் தலைமையாசிரியர் கலேல்கார் எனக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் சுவை யுள்ளதும் அறிவு தருவதுமான ஒரு கதையை எழுதி யிருக்கிறார். அதன் மொழி பெயர்ப்பைக் கீழே தருகின்றேன் :—

"இங்கிலாந்தில் சைனாவின் ஸ்தானீகராக யிருந்த டாக்டர் வெல்லிங்கடன் கூ என்பவர் லண்டனில் நடந்த கூட்டமொன்றில் சைனாவிலுள்ள ஒரு குடும்பத்தாரைப் பற்றி ஒரு நல்ல கதையைச் சொன்னார். நம்முடைய நாட்டைப் போலவே அந்த நாட்டிலும் குடும்பத்தில் வயதானவரே அதன் தலைவராக மதிக்கப்படுகிறார். அதனால் அவர் குடும்பத்திலுள்ள பழைய தடியைக் கொண்டு தண்டிப்பதற்கு உரிமை உடையவராவார். ஒரு சமயத்தில் 100 வயதான கிழவர் ஒருவர் 75 வயதான தம்முடைய குமாரருடைய முதுகில் தடி கொண்டு அடித்தார். குமாரருடைய கண்களிலிருந்து கண்ணீர் நிரைத்துப் போயிருந்த கன்னங்களின் மீது வழிந்தது. இதற்கு முன் அடித்த காலங்களில் ஒரு பொழுதும் கண்ணீர் வழிந்ததில்லை. அதனால் தந்தை இதுவரை வராத கண்ணீர் இப்பொழுது வந்ததன் காரணம் யாது என்று குமாரரிடம் கேட்டார்.

அதற்குக் குமாரர் :—"அப்பா! உம்முடைய தடிக்கு முன்னிருந்த ஆற்றல் இப்பொழுது இல்லை. உமக்கு பலவீனம் ஏற்பட்டு விட்டது குறித்து எனக்கு வருத்தமாயிருக்கிறது. அதனால்தான் இந்தக் கண்ணீர்" என்று பதில் உரைத்தார்.

இந்தக் கடிதம் வந்த சமயம் காகா சாகேப் என்னுடன் இருந்தார். நான் அதை அவரிடம் படிப்பதற்காகக் கொடுத்தேன். அவர் அதை வாசித்துவிட்டு தம்முடைய தமிழ் நண்பர் ஒருவர் கூறிய கதை ஒன்றைக் கூறினார். அது வருமாறு :—

"ஒரு நாள் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஒருவர் மாலையில் வேலை முடிந்ததும் வழக்கம்போல் வீட்டுக்குப் போகாமல் நண்பர் ஒருவருடன் போய் தமாஷாகக் காலங்கழித்து விட்டு வெகுநேரம் சென்றபின் வீடுபோய்ச் சேர்ந்தார். அப்போது அவருடைய தாயார் அவருக்காகத் தலை வாசலில் காத்துக்கொண்டிருந்தார்.

மகன் படியில் ஏறிவந்ததும் தாயார் அவருடைய கன்னத்தில் ஒரு அறை கொடுத்து "ஏன் இவ்வளவு நேரம்?" என்று கேட்டார். மகனுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று.

இந்த விஷயத்தைக் கேட்டதும் நண்பர் "வயதானவர் படித்தவர், இப்படிக் கன்னத்தில் அவமானப்படுத்தப் பட்டதாக எண்ணுவது சகஜம். தயார் இப்படி அடித்ததும் அபூர்வமான காரியம்" என்று கூறினர். ஆனால் ஜட்ஜோ "அப்படி அடித்ததில் அவமானம் எதுவும் கிடையாது. இடையிடையே தாயாரிடம் அடிபடுவது எனக்குப் பெரிய பாக்கியமே யாகும். அவள் அடிக்கும் பொழுது எவ்வளவு பலமாக விழுமோ அவ்வளவு பலமாக அன்று விழவில்லை. அதை எண்ணித்தான் என் கண்களில் நீர் ததும்பிற்று. அவள் பலவீனம் அடைந்து விட்டாள். அந்த விஷயம் பயபக்தியுள்ள மகனுக்கு வருத்தம் தாராமல் இருக்குமா?"

புது தில்லி, — 18-10-46 — மோ. க. காந்தி.

## பலாத்கார வழிகள்

இரண்டு புள்ளிகளுக் கிடையில் நேரான கோடு ஒன்று தான் வரைய முடியும். வளைவான கோடுகளோ எத்தனை வேண்டு மானாலும் வரையலாம். ஆனால் வளைவாகக் கோடுகளை வரையும் குழந்தை தற்செயலாகத்தான் நேரான கோட்டை வரையும். அஹிம்சை என்பது ஒரு நேரான கோடு போன்றதாகும். நான் அனுஷ்டிக்கலாம் என்று கூறிய "பலாத்காரத்தில்" இவைகளை எல்லாம் சேர்க்கலாமா என்று பல விஷயங்களைக் கூறி எனக்குக் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதில் விசித்திரமான காரியம் யாதெனில் வந்த கடிதங்கள் எல்லாம் ஆங்கில பாஷையில் எழுதப்பட்டிருப்பதே யாகும்.

கடிதங்கள் எழுதியிருப்பவர்கள் என்னுடைய கட்டுரையை மறுபடியும் வாசித்தால் நான் ஏன் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது என்பதை அறிந்துகொள்வார்கள். நான் ஒரு பொழுதும் பலாத்காரத்தை உபயோகித்ததே யில்லை. அந்தக் காரணத்தினாலேயே கூட நான் பதில் கூறத் தகுதியில்லாதவனா யிருக்கின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக நான் எந்தக் காலத்திலும் பலாத்கார உபயோகத்தை அனுமதித்ததே கிடையாது. நான் இரண்டு விதமான வீரத்தையும் கோழைத்தனத்தையுமே குறிப்பிட்டிருந்தேன். சட்டப்படி அனுமதிக்கக் கூடியது அஹிம்சை ஒன்றேதான். மனிதர் இயற்றும் சட்டப்படி பலாத்காரம் நியாயமாகாது. இயற்கை இயற்றும் சட்டப்படிதான் நியாயமாகும்.

சட்டப்படி நியாயமாகா விட்டாலும் தற்பாதுகாப்புக்காகவேனும் பாதுகாப்பில்லாதவர்களைப் பாதுகாக்கவேனும் பலாத்காரத்தை உபயோகித்தால் அப்பொழுது அது கோழைத்தனமாக அடிபணிவதைவிடச் சிறந்த வீரமாகவே கருதப்படும். கோழைத்தனம் ஆணுக்கும் தகுந்ததன்று. பெண்ணுக்கும் தகுந்ததன்று. பலாத்காரம் என்பதில் பவவிதமான வீரச்செயல்களுக்கு இடமுண்டு. எதைச் செய்வது என்பதை அவரவரே தான் முடிவு செய்துகொள்ள வேண்டும். பிறர் கூறவும் முடியாது. கூறுவதற்கு உரிமையும் கிடையாது.

புது தில்லி, — 18-10-46 — மோ. க. காந்தி.


### "கிராம ராஜ்யம்"

மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டத்தைத் தமிழ் நாடெங்கும் பரவச் செய்வதற்காக மதுரை தேசபக்தர் : ஸ்ரீ கே. வெங்கடாசலபதி அவர்களால் நடத்தப்படும் மாதப்பத்திரிகை.

| | | |
|---|---|---|
| உள்நாடு வருட சந்தா | ... | ரூ. 6—0—0 |
| வெளிநாடு ,, | ... | ரூ. 7—8—0 |

மானேஜர்:

"கிராம ராஜ்யம்" காந்திநிகேதனம்,
கல்லுப்பட்டி போஸ்ட்,
மதுரை ஜில்லா.


அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை, பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை